# கே.எம்.சி.எச். மருத்துவமனையில்

# தசை இறுக்க நோய்க்கு நவீன புதிய சிகிச்சை அறிமுகம்



அருள்செல்வன்

கோவை, மே 14

கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையில் நரம்பியல் நோயான ஸ்பாஸ்டிசிட்டி (தசைநார் இறுக்க நோய்) சிகிச்சைக்கு நவீன முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது,

கை,கால்களில் திடீரென விறைப்புதன்மை ஏற்பட்டு கடுமையான வலியை உண்டாக்கும் ஒரு நரம்பியல் கோளாறு ஸ்பாஸ்டிசிட்டி என்பதாகும். நரம்புகளில் மோட்டார் நியூரான்களின் தீவிர செயல்பாட்டால், நீட்டி முறுக்கும் எதிர் விளைவால் இது உருவாகிறது. செர்விகல் மைலோபதி மற்றும் பரம்பரை ஸ்பாஸ்டிக் கோளாறுகளால்தான் இந்த நிலை ஏற்படுகிறது.

பேக்லோபென், டிசானிடின், டயசபாம், டேன்ட்ரோலின் ஆகிய மருந்துகள் ஓரளவுக்கு பயன்தரக் கூடியவை. இது ஆளாளுக்கு பயன் தருவதில் வேறுபடக்கூடியவை. மூளை அல்லது தண்டுவடத்தில் ஏற்பட்ட பாதிப்பை பொருத்தும் இந்த மாத்திரை, மருந்துகள் பலனளிக்கும். மேலும் இது தூக்கத்தையும் வரவழைக்க கூடியது.

போட்டுலுனியம் எனும் தசை மீது போடப்படும் ஊசி மருந்தும் நல்லது. சில சமயம் அறுவை சிகிச்சையால் மட்டும்தான் இறுக்கத்தை தளர்த்த முடியும். மூளையால் உருவாகும் ஸ்பாஸ்டிக் செரிபரல் பால்சி கோளாறுக்கு. ரிசோடமி சிகிச்சை உதவும். இது தசை இறுக்கத்தின் கூடுதல் செயலை குறைக்கும். இத்தகைய சிகிச்சைகள் இருந்தாலும், நரம்பியல் நிபுணர்களுக்கு சவாலான சிகிச்சை முறையாகத்தான் இந்த நோய் உள்ளது.

பேக்லோபென் பம்ப் பொருத்துதல் இதற்கு ஒரு தீர்வாக கருதப்படுகிறது. இந்த சிகிச்சைக்கு ஒன்றரை மணி நேரம் தேவைப்படும். நோயாளிக்கு சாதர்ரண மயக்க மருந்து நிலையில், அடிவயிற்று தசை பகுதியில இந்த பம்ப் பொருத்தப்படும்.

ஒரு ஊசி மூலம் தண்டுவடதிரவத்தினுள், கழுத்தை நோக்கி செல்லும் வகையில், ஒரு கதீட்டர் பொருத்தப்படும். பின் இந்த கதீட்டர், தோலுக்கு அடியில் இருந்து வயிற்று பகுதியில் உள்ள பம்ப்புடன் இணைக்கப்படும். இந்த பம்பினுள் பேக்லோபென் மருந்து நிரப்பப்பட்டிருக்கும். மேலும் இந்த பம்ப் கணினியுடன் இணைக்கப்பட்டு மருத்துவரின் பரிந்துரைப்படி, குறிப்பிட்ட அளவு மருந்து தொடர்ச்சியாக செலுத்தப்படும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கும். இந்த பம்பினுள் மருந்தை ஆண்டுக்கொருமுறை செலுத்தினால் போதும்.

50 வயதான சேலத்தை சேர்ந்த சங்கரன் என்பவர் கடந்த 10 ஆண்டுகளாக, ஸ்பாஸ்டிக் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மோட்டார் நியூரான் நோயாலும் அவதிப்பட்டார். சரியாக தூக்கமின்றி தவித்தார். கடந்த வாரம் இந்தபுதிய முறைசிகிச்சையான பம்ப் பொருத்தியவுடன் நிவாரணம் பெற்றார்.

இந்த நவீன சிகிச்சையை நரம்பியல் நிபுணர் டாக்டர் அருள்செல்வன் மற்றும் வருகை நரம்பியல் துறை நிபுணர் டாக்டர் ராம்நாராயணன் ஆகியோர் செய்தனர். கோவையில் இந்த சிகிச்சை முதன் முறையாக செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனை தலைவர் டாக்டர் நல்லா பழனிசாமி டாக்டர்களை பாராட்டினார். அவர் கூறுகையில், கே.எம்.சி.எச். மருத்துவமனை உயர்தரமான சிகிச்சைகள் மற்றும் புதுமையான மருத்துவ தொழில் நுட்பங்களை பிரயோகிப்பதில் இதே போன்று வல்லமையுடன் தொடர்ந்து செயல்படும் என்றார்.